www.tamilarangam.net

# திருகோணமலையில் 32 தமிழர் படுகொலை

கொழும்பு, ஜூன் 28—திருகோணமலை மாவட்டத்தில் கடந்த புதனன்று 32 தமிழர்கள் இலங்கை ஊர்க்காவல் படையினரால் கொல்லப்பட்டதாக ஊர்ஜிதமற்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களில் 15 பேர் பெண்கள் ஆவர்.

தம்பாலக்காமம் என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கொல்லப்பட்டவர்கள் இந்தப் பகுதியிலுள்ள இரு அரவை ஆலைகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஊர்க்காவல் படையினரால் காட்டிற்குள் அழைத்துச் செல்லப்பட்டு, பின்பு அங்கு சுட்டுக் கொல்லப்பட்ட 32 தமிழர்களில் தம[illegible]ரயும் ஒருவராவார் என ஒருஅரவை ஆலையின் அதிபர் சனியன்று காலை திருகோணமலை போலீஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

ஆனால் இது பற்றி இலங்கை அரசு தரப்பில் எந்தவிதத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

## கண்ணி வெடியில் வேன் சிக்கியது: இரு வீரர்கள் பலி

இலங்கையின் வட மத்திய பிராந்தியத்தில் சனியன்று காலை வேன் ஒன்று கண்ணி வெடியில் சிக்கி வெடித்ததில் இரு ராணுவ வீரர்களும், வேனின் டிரைவரும் உயிரிழந்தனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள கந்தலைக்கு வேன் சென்று கொண்டிருந்த போது பூமியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கியது.

## 'மட்டக்களப்பில் 35 தமிழர் பலி'

சென்னை, ஜூன் 28—கடந்த இரண்டு நாட்களாக இலங்கைப் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 35 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு என்ற இடத்துக்கு அருகே 25 விவசாயத் தொழிலாளர்கள் இலங்கைப்படையினரால் நேற்றுக் கொல்லப்பட்டனர்

சனியன்று இலங்கை பாதுகாப்புப் படையினர் நடத்திய வெடிகுண்டு தாக்குதலில் 6 தமிழர்கள் கொல்லப்பட்டனர்

# மாகாண கவுன்சில் தீர்வை எதிர்த்து இன்று ஊர்வலம்

இலங்கையில் நடைபெறவிருக்கும் அரசியல் கட்சிகளின் மகாநாட்டையும், மாகாண சபைத் தீர்வையும் எதிர்த்து ஞாயிறன்று யாழ்குடா நாட்டில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடக்கவிருக்கிறது.

இந்த ஊர்வலமும் கூட்டமும் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

# திருகோணமலையில் கைதான 500 தமிழர் சித்திரவதை

தினமணி. 03.07.86.

மதுரை, ஜூலை 2—கடந்த வாரம் இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட 70 மாணவர்கள் உட்பட சுமார் 500 தமிழர்கள் ஈவு இரக்கமின்றி கொடுமைப்படுத்தப்பட்டனர் என்று மதுரையிலுள்ள தமிழ் தகவல் மையத்துக்கு இன்று காலை செய்தி எட்டியுள்ளது.

அவர்கள் திருகோணமலையிலிருந்து காலி மாவட்டத்திலுள்ள பூசா ராணுவ முகாமுக்கு ஒரு கப்பலில் கொண்டு செல்லப்பட்டபோது இச்சித்திரவதை நடைபெற்றதாகத் தெரிகிறது.

திருகோணமலை நகருக்குச் செல்லும் எல்லா சாலைகளையும் இலங்கை ராணுவத்தினர் சென்ற வாரம் அடைத்துவிட்டனர். பிறகு எல்லா தமிழர்களையும் அவரவர் வீடுகளுக்குள்ளேயே இருக்கச் சொல்லிவிட்டு ராணுவத்தினர் வீட்டுக்கு வீடு சோதனை நடத்தினர். மொத்தம் 1250 பேர் கைது செய்யப்பட்டாலும் 800 பேர் மட்டுமே காவலில் வைக்கப்பட்டனர். இவர்களில் சுமார் 500 பேர் மட்டும் பூசா ராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களுக்கு நான்கு நாட்களுக்கு உணவோ, குடி தண்ணீரோ வழங்கப்படவில்லையென மேற்படி மையம் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

எஞ்சியுள்ள 300 பேரின் கதி என்ன என்பது தெரியவில்லை.

மட்டக்கிளப்பு மாவட்டத்தில் சென்ற திங்களன்று நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில் ஐதியமலையில் 10 வயது சிறுவன் ஒருவன் சாலையில் நடந்துசெல்லுகையில் போலீஸ் அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டான் என்றும் அந்தக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

## 4000 தமிழர்கள் வீடிழந்து தவிப்பு

சென்னை, ஜூன் 27—கடந்த சில நாட்களாக சிங்கள ராணுவத்தின் குண்டு வீச்சின் விளைவாக கிளிநொச்சியில் 4 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர் என்று தமிழீழ தகவல் மையம் வெள்ளியன்று வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளது.

வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ள தமிழர்கள் ஐந்து முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், இந்த முகாம்களில் சுகாதார வசதியின்மையால் தொற்று வியாதிகள் பரவக்கூடிய அபாயம் உள்ளது என்றும் அந்த அறிக்கை கூறியது.

திருகோணமலையில் 1000 தமிழர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் 900 பேர் கப்பல் மூலம் பீசா முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கை மேலும் கூறியது.

யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வாகனங்களை ஆனையிறவில் மடக்கித் திரும்பிச் செல்லும்படி சிங்கள ராணுவம் கூறி வருகிறது என்றும் அந்த அறிக்கை கூறியது.

செய்திகள்

# இலங்கையில் 8 ராணுவத்தினர் கொலை என 'பிளாட்' தகவல்

சென்னை, மே 26—தமிழீழ மக்கள் விடுதலைக் கழக கொரில்லா படையினர் இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த 8 வீரர்களை கொன்றனர்; மேலும் நான்கு ராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

கடந்த வெள்ளியன்று பருத்தித்[illegible]ற ராணுவ முகாமில் இந்த மோதல் நடந்ததாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழக ("பிளாட்") அமைப்பு ஞாயிறன்று சென்னையில் தெரிவித்துள்ளது.

"பிசிஎம்-85" என்னும் புதிய கண்ணி வெடிகளை பிளாட் அமைப்பினர் பயன்படுத்தியதில் பல ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்தின் வடக்கு மாகாணங்களில் நடந்த மோதலில் இத்தகைய தாக்குதல்கள் கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

[illegible]

# இலங்கையில் 44 தமிழர் வீடுகள் தீக்கிரையாயின

4-7-86

தினமணி.

சென்னை, ஜூலை 3—இலங்கையில் தலவாய்க்குலை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மலையகப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தமிழர்கள் மீது புதனன்று சிங்களக் குண்டர்கள் நடத்திய தாக்குதல் மற்றும் வீடுகளுக்குத் தீ வைப்பு ஆகிய சம்பவங்களில் 44 தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் வியாக்கல் பகுதியில் தமிழர் ஒருவரைக் கைது செய்ததையடுத்து, அப் பகுதியைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் புதன்கிழமையன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சுவரொட்டிகள்

அரசியல் தீர்வுகாண இலங்கை அதிபருடன் பேச வந்துள்ள தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி குழுவையும், அதன் முயற்சிகளையும் கண்டிக்க யாழ்ப்பாணம் அருகிலுள்ள மணிப்பாய் கோவிலிலிருந்து, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகம்வரை நாளை (ஞாயிறன்று) எதிர்ப்புப் பேரணி நடத்தும்படி "தமிழ் பேசும் மக்கள்" என்ற அமைப்பு யாழ்ப்பாணம் நகர் முழுவதும் சுவரொட்டி ஒட்டியுள்ளது. முன்னணிக் குழுவினரை "துரோகிகள்" என்று சுவரொட்டி குறிப்பிடுகிறது.

THAMIL - 01 470 6270 === ENGLISH - 01 552 5970

Published by: Thamileelam Information-Bureau,
BM Box 1916, London WC1N 3XX.

www.tamilarangam.net

# கறுப்பு ஜூலையின் நினைவாக..!

1983 ஆடி 25, 27,

சிங்களச் சனாதிகனின்
சிறைச்சாலைகள்கூடத்
தமிழனுக்குப்பாதுகாப்பானதல்ல
என்று, அன்றுதான் உலகிற்குப்
பிரகடனப்படுத்தப்பட்டது—!

புத்தனின் பற்கள் பேணப்படுகிற
ஒரு நாட்டில் —
தமிழ்மகனின் கண்கள்
தோண்டப்பட்டதை — உலகம்
கண்ணீருடன் பார்த்திருந்தது!

புத்தன் இருந்தாற்கூட
அன்று —
கண்ணீரும் செந்நீரும் கலந்த
வெள்ளத்திலேயே மூழ்கி
இறந்திருப்பான்!

தர்மம் அழிந்துபோன நாட்டில்
'தம்மபதம்' போதிக்கப்படுவது
விந்தையானது!

தண்ணீரைப் புனிதமாகப்
பேணும் பௌத்த மக்களின்
அரசு —
தமிழனின் கண்ணீருக்குப்
பதில் சொல்வதற்குப் பதிலாகத்
தமிழனின் உதிரத்தையே
குடித்துச் சரித்திரத்தில் நிரந்தர
இடம் பிடித்துக்கொண்டது.

சிறைச்சாலைக் கதவுகளைக்
குண்டர்களுக்குத் திறந்துவிட்டுத்
தனது கொலைவெறிக்குத் தீனி
போட்டுக்கொண்டது —
பாஸிஸ ஆட்சிபீடம்!

தர்மிஷ்டம் என்பதற்குத்
தம் இஷ்டம் என்று
பொருள் புரிந்து கொண்டவர்கள்
எம் இஷ்டம் என்ன என்பதைப்
புரியவைக்கத் திரண்டு நிற்கும்
மக்கள் கூட்டமே போதும்.

விடுதலை வித்துக்களை
விழுங்கத் துடிக்கும்
வெறி நாய்களை
யுத்த தேவதைக்குக்
களப்பலி ஆக்குவதே தமிழரின்
புனிதக் கடன்.

குருட்டுக்கோழி
தவிட்டை விழுங்கிய கதையாய்
மூவாயிரம் தமிழர்கள்
படுகொலை செய்யப்பட்ட
போதும்... இன்றுவரை —
தீர்ப்புமில்லை! தீர்வுமில்லை?

சதுராடிகள் எப்போதும்போல்
சதுரங்கம் —
ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழா! — நீ
என்ன செய்யப் போகிறாய்...?
தேர்தலை நம்பியே
மோசம்போன நீ — முதலில்
தேர்தலில் இருந்து விடுபடு!

களப்பலியான தோழர்கள்மீது
ஆணையிட்டு அணிதிரள்!
வெற்றியை நோக்கி மெல்லவே
நகரும் தமிழீழம்!

---

வரலாறுகளாகிவிட்ட,
எமதருமைத் தமிழீழ மக்களுக்கும்,
உரமாக உழைத்த போராளிகளுக்கும்,
எமது ஆழ்ந்த அனுதாப அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்ளும் வேளையில்,

தாயக விடிவிற்காக, ஊக்கமுடன் போராடும் அனைத்து விடுதலை இயக்கங்களுக்கும் எமது தொடர்ந்த தார்மீக ஆதரவை வழங்குவதொன்றே, எமக்காக உயிர் கொடுத்த அனைத்து மக்களுக்கும், போராளிகளுக்கும் நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்க முடியும்.

**எழுச்சி கொண்ட மக்கள் வீழ்ச்சி கண்டதாக வரலாறு இல்லை !**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்